Royal College of Anaesthetists

# ஒரு பொது மயக்க மருந்து அல்லது உணர்ச்சி உள்ளடக்கத்திலிருந்து மீண்டுவரும் ஒருவரைப் பராமரித்தல்

நோயாளிகள் தெளிவாக சிந்திக்க முடியாமல் போகலாம் மற்றும் அவர்களின் முடிவெடுக்கும் தன்மை ஒரு பொது மயக்க மருந்து அல்லது உணர்ச்சி உள்ளடக்கத்திற்குப் பிறகு 24 மணி நேரம் வரை பாதிக்கப்படலாம்.

இந்த நேரத்தில், அவர்கள்:

- குழந்தைகள் அல்லது அவர்களின் பராமரிப்பில் உள்ள பிற நபர்களுக்கு பொறுப்பாக இருக்கக் கூடாது
- ஒரு வாகனம் அல்லது ஒரு மிதிவண்டியை ஓட்டக்கூடாது
- சமைக்கவோ அல்லது எந்த இயந்திரங்களையும் பயன்படுத்தவோ கூடாது
- அவர்கள் தாங்கள் சரியாக இருப்பதாக உணர்ந்தாலும், எந்த முக்கியமான முடிவுகளையும் எடுக்கக்கூடாது
- சமூக ஊடகங்கள் / பொது மன்றங்களில் இடுகையிடுவதைத் தவிர்க்கவும்
- மது அருந்தக்கூடாது.

அவர்களுடைய சிகிச்சைக்காக உணர்ச்சி உள்ளடக்கம் எடுத்துக்கொண்ட அல்லது ஒரு செயல்முறைக்காக மயக்கமருந்து எடுத்துக்கொண்ட உங்களுடைய ஒரு நண்பரை அல்லது உறவினரை வீட்டிற்கு அழைத்துச் சென்று பராமரிக்கும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளீர்கள் இந்த துண்டுப்பிரசுரம் அவர்கள் மீட்டு எழும்போது என்ன செய்யலாம் என்ன செய்யக்கூடாது என்பதுபற்றிய பொதுவான தகவல்களை உங்களுக்கு வழங்குகிறது. இது முன்னரே திட்டமிட உங்களுக்கு உதவும்.

## நான் என்ன எதிர்பார்க்க வேண்டும்?

உணரச்சி உள்ளடக்க மருந்து அல்லது மயக்க மருந்து சில நோயாளிகளை சிறிதளவு குழப்பமடையச் செய்யலாம் மற்றும்
அவர்களின் சிகிச்சைக்குப் பிறகு நிலைதடுமாற வைக்கலாம். முக்கியமாக, இது அவர்களின் முடிவெடுக்கும் தன்மையை பாதிக்கும், எனவே அவர்களால் தெளிவாக சிந்திக்க முடியாமல் போகலாம். இது 24 மணி நேரம் வரை நீடிக்கலாம், எனவே அடுத்த நாள் வரை. இந்த நேரத்தில் நீங்கள் அவர்களை கவனமாக கண்காணிக்க வேண்டும். அவர்கள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வரும்போது அவர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் என்பதைக் கருத்தில் கொள்வது உதவியாக இருக்கும். உதாரணமாக, ஒரு படுக்கை தரைத்தளத்திற்கு நகர்த்தப்பட்டால் சிலருக்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

## எனது நண்பர் அல்லது உறவினரை நான் எப்போது அழைத்துக்கொள்ள முடியும்?

அவர்கள் செயல்முறையிலிருந்து நன்றாக குணமடைந்த பிறகு மற்றும் அவர்களுடன் செல்ல நீ◌ீங்கள் உடன் இருக்கும்போது மட்டுமே மருத்துவமனையில் உள்ள ஊழியர்கள் அவர்கள் வீட்டிற்குச் செல்ல அனுமதிப்பார்கள். ஒரு பொது மயக்க மருந்து அல்லது உணர்ச்சி உள்ளடக்கத்திற்குப் பிறகு நோயாளிகள் 24 மணி நேரம் வாகனம் ஓட்டக்கூடாது என்பதால், நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு திறமையான வயது வந்தவராக இருக்க வேண்டும், மேலும் அவர்களை கார் அல்லது டாக்ஸி மூலம் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் - பொது போக்குவரத்து மூலம் அல்ல.

மயக்க மருந்து, உணர்வுநீ◌ீக்கி , அல்லது அறுவை சிகிச்சைக்குப் பிறகு குணமடைய சில நோயாளிகள் மற்றவர்களை விட அதிக நேரம் எடுத்துக்கொள்வதால், ஊழியர்கள் உங்களுக்கு மிகச்சரியான வெளியேறும் நேரத்தை சொல்ல முடியாது. எனினும், உங்களுக்கு ஒரு தோராயமான நேரம் அல்லது அழைப்பதற்காக ஒரு தொலைபேசி எண் வழங்கப்படும். உங்களைத் தொடர்பு கொள்ள செவிலியர் உங்களது தொலைபேசி எண்ணையும் பெற்றுக்கொள்வார். நோயாளியால் நடக்க முடியாவிட்டால், உங்கள் போக்குவரத்து சாதனத்திற்கு பாதுகாப்பாக செல்ல உதவ சக்கரநாற்காலி வழங்கப்பட வேண்டும்.

## நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் சொல்லப்படுமா?

உங்கள் நண்பர் அல்லது உறவினருக்கு குறிப்பிட்ட எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களை மருத்துவர்கள் வழங்குவார்கள், இதில் அடங்கவேண்டியது:

- அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது என்ன எதிர்பார்க்கலாம்
- செயல்முறைக்குப் பிறகு சாப்பிடுவது, குடிப்பது மற்றும் அவர்களின் சாதாரண மருந்துகளை எடுத்துக்கொள்வது பற்றிய அறிவுறுத்தல்கள்
- கவனிக்க வேண்டிய கவலை எதுவும் இருந்தால், மற்றும் உங்களுக்கு அல்லது அவர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது அவர்கள் நன்றாக உணரவில்லை என்றால் மருத்துவமனையைத் தொடர்பு கொள்ள ஒரு எண்
- செயல்முறைக்குப் பிறகு அவர்களால் செய்யக்கூடிய மற்றும் செய்ய முடியாத விஷயங்கள்
- வலி நிவாரணி போன்ற அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய ஏதேனும் கூடுதல் மருந்துகள் பற்றிய தகவல்கள்
- காயங்களை சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் பற்றிய தகவல்கள். நீங்கள் உங்கள் நண்பர் அல்லது உறவினருடன் இந்த அறிவுறுத்தல்களைப் பகிர்ந்து, அவை பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய உதவ வேண்டும்.

## என் நண்பர் அல்லது உறவினர் வீட்டில் என்ன செய்ய வேண்டும்?

இது அவர்கள் மருத்துவமனையில் பெற்ற செயல்முறை மற்றும் அறிவுறுத்தல்களைப் பொறுத்து இருக்கிறது பொதுவாக, அவர்கள்:

- நிறைய ஓய்வு எடுப்பது அவர்கள் குணமடைய உதவும்
- அவர்கள் நிலைதடுமாறினால், உதவியின்றி நடக்க வேண்டாம், மற்றும் படிக்கட்டுகளை தவிர்ப்பது நல்லது.
- தங்கள் வழக்கமான மருந்து மற்றும் ஏதேனும் கூடுதல் வலி நிவாரணத்தை எடுத்துக்கொள்வது பற்றி மருத்துவமனயின் அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும்
- சாப்பிடுவது, குடிப்பது மற்றும் கழுவுவது பற்றி அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

## அவர்கள் என்ன செய்யக்கூடாது?

அவர்களால் தெளிவாக சிந்திக்க முடியாமல் போகலாம் மற்றும் மயக்கமருந்து அல்லது உணர்ச்சி அடக்கத்திற்குப் பிறகு 24 மணிநேரம் வரை அவர்களின் முடிவெடுக்கும் தன்மை பாதிக்கப்படலாம். இந்த நேரத்தில், அவர்கள்:

- குழந்தைகள் அல்லது அவர்களின் பராமரிப்பில் உள்ள பிற நபர்களுக்கு பொறுப்பு எடுத்துக்கொள்ளக் கூடாது
- ஒரு வாகனம் அல்லது ஒரு மிதிவண்டியை ஓட்டக்கூடாது
- சமைக்கவோ அல்லது எந்த இயந்திரங்களையும் பயன்படுத்தவோ கூடாது
- மது அருந்தக்கூடாது.
- அவர்கள் தாங்கள் சரியாக இருப்பதாக உணர்ந்தாலும், எந்த முக்கியமான முடிவுகளையும் எடுக்கக்கூடாது
- சமூக ஊடகங்கள்/பொது மன்றங்களில் இடுகையிடுவதைத் தவிர்க்கவும்.

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்

இந்தத் துண்டுப்பிரசுரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**மயக்க மருந்து நிபுணர்களின் ராயல் கல்லூரி**
சர்ச்சில் ஹவுஸ், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

இரண்டாவது பதிப்பு, பிப்ரவரி 2021

வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இந்த துண்டுப் பிரசுரம் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2021 மயக்க மருந்து நிபுணர்களின் ராயல் கல்லூரி**

நோயாளியின் தகவல் செய்திகளை தயார் செய்யும் நோக்கத்திற்காக இந்த துண்டுப்பிரசுரம் நகலெடுக்கப்படலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்த துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதியை மற்றொரு வெளியீட்டில் நீங்கள் பயன்படுத்த விரும்பினால், தகுந்த ஒப்புகை அளிக்கப்படவேண்டும், மேலும் சின்னங்கள், தர அடையாளம் மற்றும் படிமங்கள் நீக்கப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு, எங்களைத் தொடர்புகொள்ளவும்.